பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 11 புதன்கிழமை 27.07.2022 கதிர் 264

**இது ரகசியம் அல்ல!**

'நடுவல கொஞ்சம் பக்கத்த காணோம்' – சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வந்த ஒரு திரைப்படம். கிரிக்கெட் விளையாடும் போது கதாநாயகனுக்குத் தலையில் அடிபட்டமையினால் இடையில் சில நாள்கள், சில விடயங்கள் மட்டும் ☞2

# நாடாளுமன்றில் இன்று ரணில் அரசுக்குச் 'செக்'

## அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கப் பல கட்சிகள் முடிவு



(ந.லோகதயாளன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசுக்கு நாடாளுமன்றத்தில் இன்று முதல்நாளே வாக்கெடுப்பு என்ற பெயரில் 'செக்' வைக்கப்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

நாடாளுமன்றத்தில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்வின்போது இரகசியமாக வாக்களித்தோருக்கு இன்று சிக்கல் நிலை ஏற்படவுள்ளது. ☞2

## வெளிநாடு செல்ல முற்பட்ட போராட்டக்காரர் விமானத்துக்குள் வைத்து சி.ஐ.டியால் கைது

### ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் குழப்பம் விளைவித்தவராம்



அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கை ரூபவாஹினிக்கூட்டுத்தாபனத்துக்குள் கடந்த 13ஆம் திகதி பலாத்காரமாகப் பிரவேசித்து நேரலையைச் சீர்குலைக்க முயன்ற தனிஸ் அலி நேற்று மாலை கைதுசெய்யப்பட்டார்.

டுபாய்க்கு விமானத்தில் செல்ல முயன்றபோது விமானத் துக்குள் வைத்து அவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸ் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

## ரணிலுடன் நெருக்கமாக பணியாற்ற மோடி தயார்!

### வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு



இலங்கையில் புதிய ஜனாதிபதியாகத்தெரிவுசெய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கையின் ☞2

## யாழ்.பல்கலை விரிவுரையாளர்கள் போராட்டம்




(இ.கலையமுதன்)

அரசினுடைய நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ☞2

## மட்டக்களப்பு தன்னாமுனையில் விபத்தில் சகோதரர்கள் மரணம்



மட்டக்களப்பு தன்னாமுனையில் நேற்று செவ்வாய்கிழமை பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் – டிப்பர் வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த சகோதரர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

மட்டக்களப்பு – திருகோணமலை ☞2

## தினேஷ் – பாக்லே சந்திப்பு



இலங்கைக்கான இந்தியத்தூதுவர் கோபால்பாக்லே, பிரதமர் தினேஷ் குணவர்தனவை நேற்று சந்தித்தார்.

கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. ☞2

## அநுரவுடன் இந்தியத் தூதர் கொழும்பில் முக்கிய பேச்சு



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் முக்கிய சந்திப்பு நடைபெற்றது. ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
மறந்து போனமையை ஒட்டி கட்டவிழும் கதை. இந்தத் திரைப்படம் பலருக்கும் பார்த்த ஞாபகமிருக்கும் – கதாநாயக னுக்கு வந்தமை போல மறதி வராவிட டால்.

அந்தக் கதாநாயகன் போன்று வேறு சிலருக்கு ஒருவித மறதி நோய் இருக் கின்றது. அதை – Selective Amnesia - 'தேர்ந் தெடுக்கப்பட்ட ஞாபக மறதி' என்று மருத் துவம் பேசுகிறது. எல்லாம் தெளிவாக ஞாபகம் இருக்கும், எனினும் குறிப்பிட்ட சிலவிடயங்கள்மட்டும்மறந்துவிட்டதாகத் தோன்றும்.

உண்மையிலேயே இது ஞாபக மறதி நோயின் ஒரு வகையா அல்லது சம்பந் தப்பட்டவர் வேண்டுமென்றே ஒரு பகுதியை மறந்து விட்டவராகத் தன்னை கற்பனை பண்ணுகின்றாரா என்றும் கூட மருத்துவம் சந்தேகிப்பதுண்டு.

அப்படி ஒரு நோய் நம் அரசியல்வாதிகள் பலருக்கும் தங்கள் வசதிக்கு ஏற்ப வருவதுண்டு. அது பற்றிய ஒரு தகவல் இது.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பது குறித்து புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் புதிய பிரதமர் தினேஷ் குண வர்த்தனவும் இரண்டொரு தினங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்தனர். அவை தனித் தனிச் செய்திகளாக 'காலைக்கதிர்' நாளிதழில் வெளிவந்தி ருந்தது.

அவை குறித்து தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கருத்துக் கேட்டு – அவரின் பிரதிபலிப் பைப் பெற்று – பிரசுரிக்க நமது செய்தியா ளர் விரும்பினார். சம்பந்தனைத் தொடர்பு கொண்டு கருத்தும் கேட்டார். அவரின் கருத்து நேற்றைய காலைக்கதி ரில் பிரசுரமாகியிருந்தது. நம் வாசகர்கள் வாசித்திருப்பார்கள். அதுவல்ல விடயம். அதன் பின்னர் நடந்தவைதான் விவகாரம்.

"ஐயா! நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைமைப் பதவியில் இருந்து இறங்க வேண்டும், உங்கள் பணி போதும், அடுத்த தலைவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியமிக்க வேண்டும் – என்று தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் வெளிப்படையாக கூறியுள்ளார் உங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்கா ளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. அது குறித்து உங்கள் பிரதிபலிப்பு என்ன ஐயா?" – என்று சாவகாசமாகக் கேட்டார் நமது செய்தியாளர்.

அவ்வளவுதான். சம்பந்தனுக்கு அந் தச் செய்தியே மறந்து விட்டது.

"இல்லை. எனக்கு அப்படி ஒரு செய் தியும் தெரியாது. நான் அப்படி ஒரு செய்தி யைப் பார்க்கவும் இல்லை; அறியவும் இல்லை" என்று நறுக்கெனப் பதில் கூறி தொலைபேசியைச் சடாரென அடித்து வைத்தார் சம்பந்தன்.

செல்வம் கூறிய பேட்டியின் விடயம் அதற்கு முதல் நாள்தான் 'காலைக்கதிர்' நாளிதழில் முன்பக்கத் தலைப்புச் செய்தி யாக முழு விவரத்துடன் வெளியாகியிருந் தது. அது மட்டுமல்ல. சம்பந்தன் தவறா மல் பார்க்கும் ஒரே ஒரு கொழும்புத் தொலைக்காட்சிச் செய்தியில்தான் செல் வத்தின் அந்தப் பேட்டியின் சம்பந்தப்பட்ட பகுதி விலாவாரியாக ஒளிபரப்பாகி இருந்தது. நிச்சயம் சம்பந்தன் அதைப் பார்த்திருப்பார். அவருக்கு அது விடயம் தெரிந்திருக்கும். குறைந்தபட்சம் கூட்ட மைப்பில் சுமந்திரனாவது (செல்வத்துக்கு எதிராக வத்தி வைப்பதற்காகவேனும்) சம் பந்தன் ஐயாவுக்கு இதனைத் தெரியப் படுத்தி இருப்பார். அப்படி இருந்தும் அந் தச் செய்தி தமக்கு தெரியாது என்கிறார் சம்பந்தன்.

அப்படியானால் அவருக்கு Selective Amnesia நோயும் வந்து விட்டது என்று தான் அர்த்தம்.

தவிரவும், உண்மையில் அப்படி ஒரு செய்தி இரண்டு நாள்களாகியும் சம்பந் தனுக்குத் தெரியாது என்றால் கூட்டமைப் புத் தலைவர் பதவியை விட்டு சம்பந்தன் விலக வேண்டியவர்தான் என்று செல் வத்தின் கோரிக்கையை நாமும் சேர்ந்து அங்கீகரித்துப் பரிந்துரைப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

'தலைவரே! தலைமையை விட்டுப் போங்கள்!' – என்று கொழும்பில் பிரபல மான ஊடகத்துக்கு நேரடி அஞ்சலில் வெளியான செவ்வியில் பங்காளி கட்சி தலைவர் ஒருவர் அப்பட்டமாக – வெளிப் படையாக – தெரிவித்த பின்னர், இரண்டு நாள்கள் கழித்தும் அப்படி ஒரு தகவல் கூட்டமைப்புத் தலைவருக்கு தெரியாது என்றால், அவருக்குக் கூட்டமைப்புத் தலைமைப் பதவி எதற்கு? செல்வம் கூறு கின்றமைப் போல அதை விட்டுவிட்டு விலகுவதுதான் அவருக்கும் நல்லது, கூட்டமைப்புக்கும் நல்லது.

– மின்னல் –

## தினேஷ் - பாக்லே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
இதன்போது இரு நாடுகளுக்கும் இடை யிலான பொருளாதார உறவுகள் உள் ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்து ரையாடப்பட்டன என்று பிரதமர் அலுவ லகம் தெரிவித்துள்ளது.

இவ்வேளையில் முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது டன், நாட்டில் புதுப்பிக்கத்தக்க மின்சக் தித்துறை மற்றும் ரயில் உட்பட போக்கு வரத்து அமைப்பின் வளர்ச்சிக்கு தேவை யான உதவிகளை இலங்கைக்கு வழங் குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப் பட்டது.

## யாழ்.பல்கலை விரிவுரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங் கத்தின் ஏற்பாட்டில் நண்பகல் 12 மணி யளவில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பல் கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

மக்களுடைய போராட்டத்துக்கு மதிப் பளி, நாட்டைக் கொள்ளை அடிக்காதே, ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு போன்ற பதாகைகளை ஏந்தி விரிவுரையாளர்கள் கவனவீர்ப்பை முன் னெடுத்தனர்.

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்ட கால எல்லையை மேலும் நீடிப்பதற்கு நாடாளுமன்றத்தில் இன்று பெயர் கூவி அல்லது இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

இந்நிலையில், அவசரகாலச் சட்டத் துக்கு எதிராக வாக்களிக்க எதிரணிகளான ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் பங்கா ளிக் கட்சிகளும், தமிழ்த் தேசியக் கூட் டமைப்பும், ஜே.வி.பியும் தீர்மானித்துள் ளன.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், அரசிலிருந்து வெளியேறிய விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தலைமையிலான சுயாதீனக் கட்சிகளும் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்க ளிக்க முடிவெடுத்துள்ளன.

இதேபோல் டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணியும் இன்று எதிரணியில் அமர்கின்றது. அதனால் ரணில் அரசு இன்று நாடாளுமன்றத் தில் முதலாவது பலப்பரீட்சையை எதிர் கொள்ளவுள்ளது.

## ரணிலுடன் நெருக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சிக்கு இந்தியா தொடர்ந்து உறுதுணை யாக இருக்கும் என்று அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், மக்களின் பரஸ்பர நல னுக்காக ஜனாதிபதியுடன் நெருக்கமாகப் பணியாற்ற எதிர்பார்த்திருப்பதாக இந்தியப் பிரதமர் அறிவித்துள்ளார் என்று இந்தி யத் தூதரகம் நேற்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவுக்கு சீன ஜனாதிபதி ஸீ பின் ஜிங், ரஷ்ய புடினும் முன்னதாக வாழ்த்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பிரதான வீதியில் தன்னாமுனை பகுதி யில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது. சத்துருகொண்டான் கிராமத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களே இவ்வாறு உயிரிழந் தனர்.

இந்த விபத்து தொடர்பிலான மேல திக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## அநுரவுடன் இந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாட்டின் பொருளாதார நிலைமை மற் றும் இருதரப்பு உறவுகளை மேம்படுத் துவது தொடர்பாக இதன்போது கலந்து ரையாடப்பட்டது என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரி வித்தார். இந்தச் சந்திப்பில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் எம். பியும் கலந்துகொண்டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
### கலைமாமணிப்பட்டப்படிப்பு (வெளிவாரி)

முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2018
அணி – III

மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஆவணி மாதமளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை 27.07.2022 ஆம் திகதியிலிருந்து 31.07.2022 (ஞாயிற்றுக் கிழமை) வரையான காலப்பகுதியில் (காலை 9.30 மணி – மாலை 3.45 மணி வரை) திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தினை 31.07.2022 ற்கு முன்னராக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். மேலும் பரீட்சை அனு மதி அட்டை வழங்குதல் மற்றும் பரீட்சை நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்.

பதிவாளர்
26.07.2022




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நம் காரியத்தில் கண்ணாயிருங்கள்!

இறைமையை மீட்பதற்கான தமிழர்களின் விடுதலைப் போராட்டங்களும் அவற்றின் விளைவுகளும் தந்த பட்டறிவுகளில் இருந்து – அனுபவங்களில் இருந்து – சரியான பாதைகளைத் தீர்மானிக்காமல் – யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளாமல் – தொடர்ந்து பயணிப்போமேயானால் தொடர் தோல்விகளும் அழிவுகளும்தான் எஞ்சும்.

தோற்றுப் போன சமுதாயகமாகத் துவண்டு விடாமல், மீண்டும் நிமிர்ந்து நிற்க வேண்டுமானால் வரலாற்றில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு, சரியான பாதைகளைத் தீர்மானிக்க வேண்டும்.

'தமிழர் தேசத்துக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான இறையாண்மையுடைய, மத சார்பற்ற சோசலிச தமிழீழ அரசு மீளப்பட்டு, மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும்.' – என்று தமிழீழத் தனியரசு நிறுவதற்கான வட்டுக்கோட்டைத் தீர்மானம் 1976 மே 14ஆம் திகதி நிறைவேற்றப்பட்டபோது, அதை நிறைவேற்றிய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியில் சம்பந்தன் இல்லை.

எனினும், அந்தத் தனியரசை நிறுவுவதற்கு தமிழ் மக்களின் ஆணையைப் பெறும் வாக்களிப்பாக 1977 பொதுத் தேர்தலை தமிழர் தரப்புப் பிரகடனப்படுத்திய போது, அதற்காகத் திருகோணமலைத் தொகுதியில் நிறுத்தப்பட்டு, வெற்றி பெற்ற வேட்பாளர் சம்பந்தன்.

அவரே, 2009 இல் முள்ளிவாய்க்காலில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்ட தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை அடுத்து, ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத, பிளவுபடாத இலங்கைத் தீவில் சமஷ்டி அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்ட ஒரு தீர்மானத்தை தமிழர்களின் அபிலாசையாக முன்நிறுத்தி, அரசியலைக் கொண்டு செல்கின்றார்.

ஆயுதபலத்தை தமிழர் தரப்பு இழந்து விட்ட நிலைமையில் –

தமிழர்களின் ஜனநாயகப் பலம் தென்னிலங்கை பௌத்த, சிங்களத்தின் இராட்சத எண்ணிக்கைப் பலத்தின் முன்னால் தூசு என்ற யதார்த்தப்புற நிலையில் –

பேரம் பேசும் வலிமையோ, வாய்ப்போ தமிழர்களுக்குக் கிட்டாத புறச்சூழலில் –

தமிழர்களின் அரசியலைத் தந்திரோபாயமாக வழிநடத்திச் செல்ல வேண்டிய இக்கட்டு வந்திருக்கின்றது.

சரியோ, பிழையோ தென்னிலங்கையின் அரசியல் பௌத்த, சிங்கள பேரினவாத வெறிப்போக்குக்குள் சிக்குண்டு கிடக்கின்றது. மகாவம்ச மனவமைப்புக்குள் ஊறிப் பேரின மமதைப் போக்கின் உச்சத்தில் தாண்டவமாடுகின்றது.

இலங்கையின், இரும்புச் சட்டகம் போன்ற அரசமைப்பும், பேரினவாதத்தைக் காபந்து பண்ணுவதே தனது கடமை என்று சிந்தித்துச் செயலாற்றும் இலங்கையின் சட்டங்களும், நீதித்துறையும் தமிழருக்கு நீதி செய்யும் என்று அவற்றில் நம்பியிருப்பதும் பயனற்றது.

இதற்குள், தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளை நலிவுற்ற தமிழர்களாகிய நாம் சரியாக எடைபோட வேண்டும்.

தென்னிலங்கைத் தரப்புக்கு நீதி சொல்லவேண்டிய –நீதியை நிலைநாட்ட வேண்டிய –கடப்பாடு தமிழர்களுடைய தல்ல. யார் பேரினவாதத்தில் குறைந்தவர், தமிழர்களாகிய நமக்கு யார் அதிகாரத்திலிருப்பது பேரினவாத ஆக்கிரமிப்புத் தொல்லை குறைவாக இருக்கும் என்று நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும். அதை விடுத்துத் தென்னிலங்கைக் குழப்பங்களுக்கு நீதி கூறித் தீர்ப்புச் சொல்லும் நீதிபதி பாணியில் நாம் அரசியல் செய்ய வேண்டியதில்லை. இது தமிழர் தலைவர்களுக்குப் புரிந்தால் சரி.

# நல்லூர் மஹோற்சவத்துக்கான ஏற்பாடுகள்; யாழ்.மேயர் மணிவண்ணன் விளக்கம்!



ஈஸ்டர் குண்டு வெடிப்பு மற்றும் கொரோனாத் தொற்று காரணமாக கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்ற நல்லூர் மஹோற்சவம், 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு எவ்வாறு நடந்ததோ அதேபோல இம்முறையும் இடம்பெறுமென யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவித்தார்.

மஹோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்நேற்று(செவ்வாய்க்கிழமை) யாழ். மாநகர சபையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு பின்னர் நல்லூர் ஆலயப் பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

ஓகஸ்ட் முதலாம் திகதி காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஓகஸ்ட் 29 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும்.

வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எந்தக் காரணம் கொண்டும் வாகனங்கள் உட்செல்ல முடியாது.

அதேபோல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது.

ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொலி பதிவுசெய்ய முடியாது. காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

ஆலயத்துக்கு நேர்த்திக் கடன்களைக் செலுத்துவதற்காக வருகின்ற தூக்குக்காவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும்.

அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ். நகரை அடைய முடியும்.

ஆனால் இரதோற்சவம் மற்றும் சப்பறத் திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

முகக்கவசங்களை அணிவது சட்டமாக்கப்படவில்லை. இருந்த போதும் கொரோனா எச்சரிக்கை காணப்படுவதால் முகக்கவசங்களை அணிந்து தன்னெழுச்சியாக சுகாதார விதிமுறைகளை பக்தர்கள் பின்பற்றவேண்டும்.

ஒவ்வொரு தனி மனிதனும் தங்களது சுகாதாரத்தில் கவனம் எடுத்து செயற்பட வேண்டும்.

திருட்டுச் சம்பவங்களைத் தவிர்க்க நல்லூர் ஆலயச்சூழலில் யாழ். மாநகர சபையால் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். – என்றார்.

# கிரிபத்கொட வைத்தியசாலையில் 7 ஊழியர்களுக்குக் கொரோனா!

கிரிபத்கொட வைத்தியசாலை ஊழியர்களில் 7 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி 7 பேரும் தற்போது றாகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கம்பஹா வைத்தியசாலையின் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா தொற்றுக்குள்ளான ஐந்து பேர் தற்போது கம்பஹா வைத்தியசாலையில்சிகிச்சைபெற்றுவருகின்றனர் என சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைய நாள்களில் கம்பஹா மாவட்டத்தில் இரண்டு கொரோனா மரணங்கள்பதிவாகியுள்ளள என சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மாதாந்த பருவச்சீட்டு கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்க முடியாது

## ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

பொதுப் பயணிகளை அசௌகரியத்திற்குள்ளாக்கும் வகையில் ரயில்வே மாதாந்த பருவச்சீட்டு கட்டணத்தை அதிகரிக்க இடமளிக்க முடியாது.

புதிய கட்டண திருத்தத்துக்கமைய பருவச்சீட்டு கட்டண அதிகரிப்பு நூற்றுக்கு பன்மடங்கு அதிகரிக்கப்படவுள்ளமை நியாயமற்றதாகும் என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேச சோமரத்ன தெரிவித்தார். மருதானையில் உள்ள ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ரயில்வேத் திணைக்களம் முறையான வழிமுறைகளுக்கமைய புதிய கட்டண திருத்தத்தை ஆரம்பத்தில் தயார் செய்யவில்லை.

பணிப்புறக்கணிப்பு போராட்டத்தைத் தொடர்ந்து போக்குவரத்து அமைச்சின் செயலாளருடன் இடம்பெற்ற பேச்சின்போது இந்த குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டது.

எரிபொருள் விலையேற்றத்தை கருத்திற்கொண்டு ரயில் சேவையின் சாதாரண பயணச்சீட்டு கட்டணங்கள் மாத்திரம் திங்கள் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. குறைந்தப்பட்ச கட்டணம் 20 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் மாதாந்த பருவச்சீட்டு கட்டணம் பன்மடங்கு அதிகரிக்கப்படவுள்ளன. உதாரணமான தற்போது 2 ஆயிரத்து 980 ரூபாவாகக் காணப்படும் சீசனுக்கான கட்டணம் எதிர்வரும் மாதம் முதல் 6 ஆயிரம் ரூபாவாக நிர்ணயிக்கப்படவுள்ளன.

மாதாந்த பருவச்சீட்டு கட்டணத்தை இவ்வாறு முறையற்ற வகையில் அதிகரிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும்பாலானவர்கள் ரயில் சேவையைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள். இவ்வாறான நிலையில் ரயில் கட்டணத்தையும் அதிகரித்தால் பொது பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வார்கள். – என்றார்.

# காணாமலாக்கப்பட்டோருக்கான நீதிக்கு இன்னும் எத்தனை காலம் காத்திருப்பது?



- தேவரத்தினம் அன்ரனி சுரேஸ் -




ஈழப்போர் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்து சென்ற நிலையிலும் இலங்கை இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூற தவறியிருக்கின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் அவர்களது அன்றாட வாழ்வியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இலங்கை இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட நிலத்தை விடுவித்தல், சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல், புனர்வாழ்வின் பின் விடுதலையான முன்னாள் போராளிகளை மீண்டும் கைது செய்யா வண்ணம் பாதுகாத்தல், யுத்த காலத்தின் போதும், இராணுவம் மற்றும் அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்பவும் இராணுவத்திடம் ஒப்படைத்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடுதல் எனப் பல பிரச்சினைகள் உள்ளன. இவை அன்றாடம் அவர்களது வாழ்வியலில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இது தமிழர்கள் மத்தியில் இன்னும் ஓர் இனச்சுத்திகரித்தலாகவே தொடருகின்றது. இதில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் என்பது ஏனையவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்டதும் ஆழமாக நோக்கப்பட வேண்டியதும் ஆகும்.

இலங்கை நாட்டைப் பொறுத்தவரை யுத்த காலத்தின் போது முப்படைகள், பொலிஸார் மற்றும் புலனாய்வுத்துறையினரால் சந்தேகத்தின் பேரிலும், சுற்றிவளைப்புக்களின் போதும் கைது செய்யப்பட்டவர்களும், இறுதி யுத்தின் போது அரசாங்கத்தினதும்,




இராணுவத்தினதும் அறிவிப்புக்கு அமைய பலர் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டோருமே காணாமல் ஆக்கப்பட்டோராகவுள்ளனர். சுமார் 16 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரையிலானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச நிறுவனங்களினதும், மனிதவுரிமை செயற்பாட்டாளர்களினதும் அறிக்கைகளின் மூலம் அறிய முடிகின்றது. இந்த எண்ணிக்கையைச் சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை. இவர்களுக்கான தீர்வு என்பது தமிழ் மக்களின் மத்தியில் பதற்றத்தையும், ஏமாற்றத்தையும் கொடுத்து இன்று வரை அது கானல் நீராகவே உள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்படுவோர் குறித்து காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடிய அரசியல் புறச் சூழல்



எதுவும் காணப்படவில்லை. ஆனால் இன்று யுத்தம் முடிந்து 13 வருடங்கள் கடந்து விட்ட போதும் அதில் உள்ள முன்னேற்றம் என்பது கண்துடைப்பாகவே உள்ளது.

முன்னாள் கோட்டாபய, மஹிந்த அரசாங்கம், யுத்த மோதல்களின் போது எந்தவிதமான மனித உரிமை மீறல்களும் இடம்பெறவில்லை என அடியோடு மறுத்ததுடன், மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்பு கூறலைப் புறந்தள்ளி வந்துள்ளது.

கடந்த ரணில் மற்றும் மைத்திரி கூட்டரசாங்கமானது பொறுப்பு கூறுவதற்கான ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் இரண்டு பிரேரணைகளை ஏற்று அவற்றை நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணையும் வழங்கியிருந்தது. அத்துடன் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றினையும் நிறுவியுள்ளது. ஆயினும் சர்வதேச அழுத்தத்தைக் குறைப்பதற்காகவும், கால நீடிப்புக்கள் ஊடாக இப்பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்வதற்காகவும் இவற்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, அதில் எந்தவித காத்திரமான முன்னேற்றத்தையோ பயனையோ அவதானிக்க முடியவில்லை.

காணாமலாக்கப்பட்டோர் இறந்து விட்டார்கள் என்றால் ஒரேயடியாக அழுது தீர்த்து விதியைத் திட்டி கண்ணீரால் காயத்தை ஆற்றிவிடலாம். அவர்களுக்குரிய கிரியைகளை நடத்தி ஆத்மசாந்திக்காக வழிபடலாம். ஆனால் தம் உறவுகளுக்கு என்ன நடந்தது, உயிரோடு இருக்கிறார்களா, இல்லையா, இன்று வருவார்களா, நாளை வருவார்களா? என




தினம் தினம் எதிர்பார்ப்போடு செத்துப் பிழைப்பது எத்தனை கொடுமையானது? இந்த நிலைமை வார்த்தைகளுக்குக் கட்டுப்படாதது. அனுபவிப்பர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ளக்கூடிய துயரத்தின் உச்சம் அது. அந்த உச்சகட்ட துயரத்துடனேயே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது பிள்ளைகள், தமது கணவன்மார், மனைவிமார், உறவுகள் மீள வருவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை எண்ணி தினம் தினம் செத்துக் கொண்டிருக்கின்றார்கள். காலநீடிப்புக்களும், இழுத்தடிப்புக்களும் செய்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கம் யாருக்கு பொறுப்புக் கூற போகிறது? காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி, அலைந்து திரிந்து, நாளாந்தம் போராட்டம் நடத்திய தாய்மார்கள் மரணித்திருக்கின்றார்கள். அவர்கள் தமது பிள்ளைகளின் முடிவு தெரியாமலேயே தமது உயிரையும் மாய்த்து விட்டார்கள். இந்த நிலையை நீடிக்க விடுவதா அல்லது அந்த மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதா என்பதைத் தமிழ்த் தலைமைகள் உணர வேண்டும்.

வடக்கு - கிழக்கு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் 1,700 நாள்கள் கடந்தும் நீண்டு கொண்டிருக்கிறது. அவ்வப்போது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் போராட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றும் வருகின்றன. மக்களின் கண் ணீரால் அந்தப் பிரதேசங்கள் தினமும் நனைந்து கொண்டிருக்கின்றன. போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்





பட்ட வாக்குறுதிகளும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவரால் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. அந்த மக்கள் இந்த அரசாங்கம் மீதும், தமிழ் தலைமைகள் மீதும் அதிருப்தி கொண்டவர்களாக மாறியிருக்கின்றார்கள். தொடர் போராட்டங்களால் உடல், உள ரீதியாகவும் கடுமையாகப் பாதிப்படைந்திருக்கின்றார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பலர் சிறைச்சாலைகளிலும், இராணுவத் தடுப்பு முகாம்களிலும் மற்றும் சித்திரவதைக் கூடங்களிலும் இருக்கின்றனர் என ஆதாரங்கள் பலவும், தகவல்களும் வெளியாகியிருந்த நிலையில் கூட, அவர்களை விடுவிப்பதற்கும் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கும் சர்வதேச அழுத் தத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்தைப் பதில் அளிக்க வலியுறுத்தாத நிலையில், கூட்டமைப்பு செயற்படுவது என்பது நம்பிக்கையோடு இருக்கும் அந்த மக்களின் மனங்களில் பலத்த சலனங்களை உருவாக்கியிருக்கிறது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் எவரும் அரசுடன் இணையமாட்டார்கள்!

## திஸ்ஸ அத்தநாயக்க திடமான நம்பிக்கை



ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலர் அரசாங்கத்துடன் இணையவுள்ளனர் என வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்கே முன்னுரிமையளிப்பார்.

எனவே அவரது ஆட்சியில் ஒருபோதும் இந்நாட்டில் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட மாட்டாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எரிபொருளை விநியோகிப்பதற்கான அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன எனக் குறிப்பிட்ட அவர் , ஓகஸ்ட் 15 ஆம் திகதிக்கு பின்னர் எரிபொருளை இறக்குமதி செயற்வதற்காக இதுவரையில் எந்தவொரு முற்பதிவுகளும் செய்யப்படவில்லை என்றும் சுட்டிக் ாட்டினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதி தெரிவில் காண வாக்கெடுப்பின் போது மக்களுக்கான நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே நாம் செயற்பட்டோம்.

எனினும் ஆளும் தரப்பினர் தத்தமது பாதுகாப்பையும் எதிர்கால அரசியலையும் கருத்தில் கொண்டு செயற்பட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பல்வேறு கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம். மக்களின் ஒருமித்த ஆர்ப்பாட்டங்களை வெற்றி பெறச் செய்வதே அதன் நோக்கமாக இருந்தது.

19 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தல், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக நீக்குதல், ராஜபக்ஷர்கள் அற்ற சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்குதல் மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை உடனடியாக இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் உள்ளிட்டவை இந்தக் கலந்துரையாடல்களின் பிரதான கருப்பொருள்களாகக் காணப்பட்டன. இவற்றை நிறைவேற்றக்கூடாது என்பதற்காகவே ஆளும் தரப்பினர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தனர்.

அவர்களின் பிரதான தேவையாக காணப்பட்டது நாடாளுமன்றத்தை கலைப்பதை – இடைநிறுத்துவதாகும். தற்போதுள்ள அரசாங்கமும் நாடாளுமன்றமும் மக்கள் ஆணையை இழந்துள்ளது. நாடாளுமன்றத்தினுள் காணப்படும் நிலைப்பாடும் நாடாளுமன்றத்துக்கு வெளியில் மக்கள் மத்தியில் காணப்படும் நிலைப்பாடும் இருவேறு பட்டதாகவே உள்ளன. அத்தோடு மே ஒன்பது வன்முறையன்று வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புதிய வீடுகள் நிர்மாணிப்பதற்கு ஒத்துழைப்பு வழங் குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதிக்கு அமையவே அவர்கள் அவருக்கு வாக்களித்தனர். இதன் போது பண கொடுக்கல் வாங் கல்களும் இடம்பெற்றன எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்காக நிவாரணம் வழங்க வேண்டிய சவால் தற்போதைய ஜனாதிபதிக்குக் காணப்படுகிறது. அவருக்கு காணப்படும் இரண்டாவது சவால் வீழ்ச்சி அடைந்துள்ள அந்நிய செலாவணி இருப்பை அதிகரிப்பதாகும்.

கடந்த வருடம் ஜூன் மாதத்தை விட இவ்வாண்டு ஜூன் மாதம் வரை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் அனுப்பும் பணத்தின் அளவு 48 சதவீதத்தால் குறை வடைந்துள்ளது. வெளிநாடுகளில் உள்ள இளைஞர்களின் நம்பிக்கை இன்னும் கட்டி எழுப்பப்படவில்லை.

இன்னும் ஓரிரு தினங்களில் பாரியளவில் மின் கட்டணத்தை அதிகரிக்க உள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அதிகரித்துச் செல்லும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை ஜனாதிபதி இவ்வாறு கட்டுப்படுத்துவார் என்பதை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். இதுவரையில் 18 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் நால்வர் நியமிக்கப்பட உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் பிரச்சினைக்கு தீர்வு காண முடியுமா?

எரிபொருள் நெருக்கடியை தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் முறையான வேலை திட்டம் இல்லை.

இதற்காக அரசாங்கத்தால் அறிமுகப் படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் தோல்வி அடைந்துள் ளன. எரிபொருள் வரிசைகள் இன்னும் நிறைவுக்கு வரவில்லை.

ஓகஸ்ட் 15ஆம் திகதிக்கு பின்னர் எரிபொருள் இறக்குமதி செய்வதற்கான எந்த ஒரு முற்பதிவுகளும் இதுவரையில் செய்யப்படவில்லை. அதற்கான வேலை திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை.

குரங்கம்மை நோய் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபத்தினால் பொது சுகாதார அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனை தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

சர்வதேசம் இலங்கை மீது அதிருப்தி கொண்டுள்ளது எனவே ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்டவை தடைகளை விதிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தாமல் சர்வதேசத்துடன் சமூகமான உறவை பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவதாக கூறப்படும் கருத்துக்கள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானவை. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நாட்டில் சர்வ கட்சி அரசாங்கம் அமைக்கப்பட மாட்டாது. காரணம் ரணில் விக்கிரமசிங்க தனது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு முயற்சிப்பார். – என்றார்.

# வீட்டு உபகரணங்களைத் திருடி விற்பனை செய்த எண்மர் கைது



திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒன்பது லட்சம் ரூபா பெறுமதியான வீட்டு உபகரணங்களைக் திருடிய எட்டுப் பேரைத் தாங்கள் கைது செய்துள்ளோம் என திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மற்றும் பாலையூற்று பகுதியைச் சேர்ந்த 25வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்ட எட்டுப் பேரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பகுதியுள்ள வீடொன்றினை உடைத்து மின்விசிறி, தையல் இயந்திரம், ஒலி பெருக்கி சாதனங்கள்,இசைக்கருவி மற்றும் மின்னழுத்தி போன்ற உபகரணங்களை திருடி இவர்கள் விற்பனை செய்துள்ளனர் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, அவர்களை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அரசியல் ஸ்திரத்தன்மையை விரைவில் ஏற்படுத்துவோம்

## விஜேயதாஸ உறுதி



அரசியல் ஸ்திரத்தன்மையை விரைவாக ஏற்படுத்துவதுடன் அரசமைப்பின் 22 ஆம் திருத்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அனுமதித்துக்கொள்வோம் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தாய்லாந்துக்கான இலங்கை தூதுவரிடம் எடுத்துக்கூறியுள்ளார்.

இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் போஜ் ஹான்போல் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷவை நீதி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இரண்டு நாடுகளுக்கிடையில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாசார ஒத்துழைப்புக்களை மேலும் அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

புதிய ஜனாதிபதியின் தலைமையில் இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துதல் மற்றும் பொருளாதாரத்தை இயல்புநிலைக்குக்கொண்டுவரும்நடவடிக்கை விரைவாக மேற்கொள்ளப்படும்.

அத்துடன் அரசமைப்பின் 22 ஆம் திருத்தத்தை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அனுமதித்துக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என அமைச்சர் தூதுவருக்கு எடுத்துக்கூறினார்.

அத்துடன் 2016 ஆம் ஆண்டும் தாய்லாந்தில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் சர்வதேச வெசாக் விழாவின் பிரதான உரையை ஆற்றுவதற்கு தனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது என்றும் 2017 இல் அந்த விழா இலங்கையில் இடம்பெற்றபோது, தாய்லாந்து அதற்காக பாரியளவில் ஒத்துழைப்பை வழங்கினேன் எனவும் அமைச்சர் இதன்போது ஞாபகப்படுத்தினார்.

மேலும் பௌத்த உபசம்பந்தத்தை மீண்டும் இந்த நாட்டுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் பௌத்த மதத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காகவும் தற்காலத்தில் இலங்கையில் பொருளாதாரம் மற்றும் மத கலாசார அபிவிருத்திக்காகவும் தாய்லாந்து பெற்றுத்தரும் ஒத்துழைப்பையும் அமைச்சர் நினைவுபடுத்தினார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்குரிய நிலைமைகள் நிறைவடைந்து பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்படும் என எதிர்பார்க்கின்றோம்.

அதற்காக ராஜதந்திர ரீதியில் முடியுமான உதவிகளை பெற்றுத்தர தயாராக இருக்கின்றோம் என இதன்போது தாய்லாந்துக்கான தூதுவர் குறிப்பிட்டார் என நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக அரசிடம் இருந்து மனிதாபிமான உதவிகள்




நேற்று கையளிக்கப்பட்டன

இலங்கைக்கு தமிழக அரசாங்கத்திடம் இருந்து 300 கோடியே 40 லட்சம் ரூபாவிற்கும் அதிகமான மனிதாபிமான உதவிப் பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மேற்படி உதவிப் பொருள்கள் இந்திய உயர்ஸ்தானிகரால் நேற்று (செவ்வாய்க்கிழமை) இலங்கை அரசாங்கத்திடம் வழங்கப் பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி மற்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆகியோரிடம் இந்த உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால்மா மற்றும் 100 மெற்றிக் தொன்னிற்கும் அதிகமான மருந்துகள் இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தப் பொருள்களின் மதிப்பு 2 கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலர்கள் என இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெவித்துள்ளது.

## அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் எழுபது வீதத்தால் வீழ்ச்சியாகியது!



எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அதிவேக நெடுஞ்சாலைகளின் நாளாந்த வருமானம் 70 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் நாளாந்தம் 3 கோடி ரூபா வரை வருமானம் கிடைக்கப்பெற்று வந்த நிலையில், தற்போது அது 80 லட்சம் ரூபா வரை குறைவடைந்துள்ளது.

இலங்கையில் இரு மாதங்களுக்கு மேலாக எரிபொருள் தட்டுப்பாடு நீடிக்கின்றது.

எரிபொருளைப் பெறுவதற்கு பல நாள்கள் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக அதிகளவான பயணிகள்தூர இடங்களுக்கு சொந்தவாகனங்களில் பயணிப்பதைக் கைவிட்டுள்ளனர். பொது போக்குவரத்தையே அவர்கள் தெரிவுசெய்கின்றனர்.

மறுபுறத்தில் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்ப நிலையால் சுற்றுலா செல்பவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்துள்ளது.

அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான ஏற்பாடும் அமுலில் இருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அதிவேக நெடுஞ்சாலைகளின் வருமானம் சடுதியாக குறைவடைந்துள்ளது.

## போக்குவரத்து நெருக்கடிகளால் மாணவரும் ஆசிரியர்களும் அவதி!

எரிபொருள் நெருக்கடி காரணமாக கடந்த 3 வாரங்களாக மூடப்பட்ட பாடசாலைகள் திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் மறு அறிவித்தல் வரை வாரத்தில் 3 நாள்கள் மாத்திரமே பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைய திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் மாத்திரம் பாடசாலைகளிலும், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மெய்நிகர் ஊடாகவும் கற்பித்தலை முன்னெடுக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், மாணவர்கள், ஆசிரியர் உள்ளிட்ட பாடசாலை நிர்வாகத்தினர் கடும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

தனியார் பஸ்கள் சேவைகள் ஈடுபடுத்தப்படும் வீதம் குறைவாகக் காணப்படுகின்றமையால், அரச பஸ்களை எதிர்பார்த்து மாணவர்களும் ஆசிரியர்களும் நீண்ட நேரம் வீதிகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எரிபொருளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சிக்கல் காரணமாக பாடசாலை சேவையில் ஈடுபடும் பஸ்களும் மிகக் குறைந்தளவிலேயே சேவையில் ஈடுபட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலக்கத் தகட்டின் இறுதி எண் அடிப்படையில் எரிபொருளை விநியோகிப்பதால் தாம் மாணவர்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்வதில் கடும் அசௌகரியங்களை எதிர்கொள்கிறோம் என பாடசாலை பஸ் சாரதிகள் விசனம் தெரிவித்தனர்.

எனவே பாடசாலை சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கும், அதிபர், ஆசிரியர்களுக்கும் எரிபொருளை விநியோகிப்பதற்கு உரிய வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

## யாழ். மாநகர திண்மக் கழிவகற்றும் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு அங்கி அணியாவிட்டால் கொடுப்பனவு இல்லை!

யாழ். மாநகர சபை திண்மக் கழிவகற்றல் உத்தியோகத்தர்களும் தூய்மைப்பணியாளர்களும் உரிய பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டும் என்றும், அதை அணியத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கான கொடுப்பனவை வழங்காதிருக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற யாழ்.மாநகர சபை அமர்வின் போதே இந்த விடயம் சபை உறுப்பினர்களால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

யு.எஸ்.எய்ட் அமைப்பின் நிதியுதவியில் யாழ்.மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் உத்தியோகத்தர்களுக்கும் தூய்மைப்பணியாளர்களுக்கும் பாதுகாப்பு அணிகலங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

எனினும், பெரும்பாலான திண்மக் கழிவகற்றல் உத்தியோகத்தர்களும் தூய்மைப் பணியாளர்களும் உரிய பாதுகாப்பு அங்கிகளை அணியாது பணிகளில் ஈடுபடுகின்றமை தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வருகிறது.

இது சுகாதாரத்துக்கு தீங்கானது என்பதால், இனிமேல் மேற்படி ஆடையைக் கட்டாயமாக அணிய வேண்டும் என்றும் அதை அணியத் தவறும் பட்சத்தில் அவர்களுக்கான கொடுப்பனவை வழங்காதிருக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காணாமலாக்கப்பட்டோருக்கான நீதிக்கு .....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடு கடந்த நிலையில் புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் உறவுகள் கூட தமது நாட்டையும், மக்களையும் நேசித்தவர்களாக இந்த நாட்டில் இடம்பெற்ற உரிமைப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என வலியுறுத்தி பெரும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர். அதில் பல ஈழ உணர்வாளர்கள் கலந்து கொண்டு தமது உறவுகளுக்காகக் குரல் கொடுத்திருந்தார்கள். ஆனால் இங்கு பாதிக்கப்பட்ட அந்த மக்களது வாக்கில் பதவிகளையும், சொகுசு வாழ்க்கையும் பெற்று வலம் வரும் அந்த மக்களின் தலைவர்கள் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்க்கும் போது மிகவும் வேதனையாகவே இருக்கிறது.

காணாமல் போனோருக்கான செயலகம் தொடர்பில் ஐ.நா. பரிந்துரையை ஏற்று அரசாங்கத்தினால் சட்டமூலம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. காணாமல் போனோருக்கான செயலகம் உருவாக்குதல் மற்றும் நிர்வாகமும் கடமைகளை நிறைவேற்றலும் என்ற பெயரிலான அந்த சட்டம் நடைமுறைக்கும் வந்துள்ளது. இருப்பினும் அந்த அலுவலகம் குறித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும், மனிதவுரிமையாளர்களும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றனர். இந்த அலுவலகம் தொடர்பான தென்னிலங்கையின் கருத்துக்களை பார்க்கின்ற போதும், அந்த சட்ட மூல உள்ளடக்கம் பற்றி நோக்கும் போதும், அது வெறும் கண்துடைப்பு அலுவலகமாகவே அமையப் போகின்றது என்பது புலனாகின்றது.

ஆக, இந்த நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை இந்த அரசாங்கம் சிரத்தையுடன் கையாள்வதாகத் தெரியவில்லை. இரகசிய தடுப்பு முகாம்கள், சிறைச்சாலைகள் என தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விவரங்களை வெளியிட்டு அவர்களை அவர்களது குடும்பத்துடன் இணைக்க வேண்டும். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டிருந்தால் அவர்களுக்கான இழப்பீடு சர்வதேச சட்ட நியாயங்களுக்கு ஏதுவான நிலையில் வழங்கப்பட வேண்டும். அவர்கள் உயிருடன் இந்த காலப்பகுதியில் உழைத்திருக்க கூடிய பணத்தை வழங்குவதன் மூலமும் அவர்கள் கொல்லப்பட்ட காலப்பகுதியில் இருந்து அவர்களுக்கான ஒரு ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் அந்தக் குடும்பங்களின் பொருளாதார நிலையை என்றாலும் குறைந்த பட்சம் தீர்க்க முடியும். ஓர் உயிருக்கான விலை பணம் என்பது அல்ல. ஆனால் கொல்லப்பட்டிருந்தால் அதற்குரிய பரிகாரமாக இழப்பீடு வழங்கப்படுவதும் அந்த கொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதும் கட்டாயமானதே. இதன் மூலமே மீள நிகழாமையை உறுதிப்படுத்த முடியும்.

## சமூக ஊடகங்களில் வெறுப்புணர்வை பரப்பிய நபர் விளக்கமறியலில் வைப்பு

சமூக ஊடகங்களில் வெறுப்புணர்வை பரப்பிய குற்றச்சாட்டில் கைதான இளைஞர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

காலி பிரதேசத்தில் வைத்து 28 வயதான இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் தென் மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை யடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்துவதுடன், பொது அமைதியை சீர்குலைக்கும் நோக்கில் பேஸ்புக்கில் அவர் கருத்துக்களை வெளியிட்டிருந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவசரகாலச் சட்டம் உள்ளிட்ட சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்ட மேற்படி நபர் காலி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கருத்தை முதலில் வெளியிட்ட நபர் மற்றும் அதற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்த ஏனைய சந்தேக நபர்களைக் கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 1983 இனக் கலவரத்தின் தாக்கங்களை ஜனாதிபதி நினைவிற்கொள்ள வேண்டும்

## சம்பிக்க சுட்டிக்காட்டு

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை திருப்திப்படுத்துவதற்காகவும், எதிர்கால போராட்டத்தை இவ்வாறு தான் அடக்குவேன் என்ற அச்சத்தை ஏற்படுத்துவதற்காகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காலி முகத்திடல் அமைதி வழி போராட்டக்காரர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை முன்னெடுத்தார்.

1983 ஆம் ஆண்டு கலவரத்தில் விளைவு எந்தளவிற்கு தாக்கம் செலுத்தியது என்பதை ஜனாதிபதி நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போராட்டக்காரர்களின்தன்னெழுச்சிபோராட்டத்தால் தான் பிரதமர் மற்றும் ஜனாதிபதியாகியுள்ளதை ஐக்கிய தேசிய கட்சியின் ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் மறக்கக் கூடாது.

ஜனாதிபதியாக பதவியேற்று 24 மணித்தியாலத்திற்குள் ஜனநாயகத்துக்கு முரணாக மேற்கொண்ட செயற்பாட்டால் முழு உலகமும் இலங்கையை கண்டித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை திருப்திப்படுத்துவதற்காகவும், தனக்கு எதிராக எதிர்காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்டால் இவ்வாறு தான் அடக்குவேன் என்ற அச்சத்தை பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காலி முகத்திடல் அமைதி வழி போராட்டக்காரர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை மேற்கொண்டார்.

அதிகாரத்தை பிரயோகித்து மக்கள் போராட்டத்தை ஒருபோதும் அடக்க முடியாது. 1983 ஆம் ஆண்டு கலவரம் எந்தளவிற்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை ஜனாதிபதி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக மக்கள் போராட்டம் வெகுவிரைவில் தீவிரமடையும்.

போராட்டக்காரர்கள், அமுக்க குழுக்கள் ஆகிய தரப்பினரை ஒன்றிணைத்து வெகுவிரையில் புதிய



அரசியல்கூட்டணியைஸ்தாபிப்போம். ராஜபக்ஷர்களை பாது காப்பதற்காக நாட்டு மக்கள் மீது அடக்கு முறைமையை கட்டவிழ்த்து விடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. – என்றார்.

## பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்த ஓட்டோச் சாரதிகளுக்கே எரிபொருள்

### முக்கிய அறிவிப்பு வெளியானது

ஓட்டோச் சாரதிகள், தமது பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸ் நிலையத்தில் பதிவை மேற்கொண்டு, எரிபொருள் பெறுவதற்கான நிரப்பு நிலையமொன்றை ஒதுக்கிக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான பதிவை மேற்கொள்ளுமாறு அவர் ஓட்டோச் சாரதிகளிடம் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முதல், பொலிஸ்நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரமே எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ரணில் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ளோம்!

### வாசுதேவ தடாலடி பதில்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அரசாங்கம் விடுத்துள்ள அழைப்பை நிராகரித்துள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலாளருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு எனக்கு தொலைபேசியில் அழைப்பு விடுக்கப்பட்டது.

இந்த கூட்டம் இன்று பிற்பகல் நிதியமைச்சின் புதிய கட்டடத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. குழுக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தொலைபேசி அழைப்பை எடுத்து பெண்ணொருவர் கூறினார்.

நான் குழுக்கூட்டம் பற்றி விசாரித்த போது, அது ஆளும் கட்சி ஒழுங்கு செய்துள்ள குழுக்கூட்டம் என அவர் கூறினார். அந்த கூட்டம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் நடைபெறவுள்ளது.

150 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பி



னர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தில் வாக்களித்தவர்கள் கலந்துகொள்வார்கள் என்று எண்ணி, அவர்கள் யார் என்பதை அறிந்துகொள்ளலாம் என்பதற்காக இந்தக் கூட்டம் நடத்தப்படலாம்.

தொலைபேசியில் பேசிய பெண் தகவல் வழங்குவர் மட்டுமே என்பதால், நான் அழைப்புக்கு பதிலளிக்கவில்லை.

எனினும் நாங்கள் எதிர்க்கட்சியில் இருப்பதால், நான் குழுக்கூட்டத்தில் கலந்துகொள்ள மாட்டேன் என்பதை நாட்டுக்கு கூறிக்கொள்கிறேன் என வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் நாடு திரும்புவார்

### புதிய அரசு அறிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில்நாடுதிரும்புவார்என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமறைவாகவில்லை எனவும், சிங்கபூரில் இருந்து அவர் விரைவில் நாடு திரும்புவார் எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## மாற்றுப் பாலினத்தவர்களுக்கெதிரான சட்டங்கள் நீக்கப்படுதல் வேண்டும்

### மஹேல கோரிக்கை



மாற்றுப் பாலினத்தவர் மக்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டும் சட்டங்களை நீக்குமாறு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் மாற்றுப் பாலினத்தவர் மக்கள் எதிர்கொள்ளும் பாகுபாடு மற்றும் அழுத்தங்கள் தொடர்பாகத் தாம் வருத்தமடைகிறேன் எனவும் மஹேல ஜயவர்தன தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டங்களை மாற்றுவது எவ்வளவு இன்றியமையாததோ, அதே அளவு கல்வியில் சீர்திருத்தங்கள் மூலம் மனநிலையை மாற்றுவதும் முக்கியம் என்று அவர் கூறினார். இலங்கையில் எந்தவொரு விரிவான பாலியல் மற்றும் உறவுமுறைக் கல்வி இல்லை.

இது நாட்டில் அதிகரித்து வரும் பாலியல் வன்முறை மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடு சம்பவங்களுக்குக் காரணமாக அமைவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. குடும்பங்கள் தங்கள் மாற்றுப் பாலினத்தவர் குழந்தைகளை ஏற்று அவர்களுக்கு ஆதரவாக நிற்பதன் முக்கியத்துவம் தொடர்பாக ஜெயவர்தன பேசினார்.

கிரிக்கெட் மற்றும் விளையாட்டு தொடர்பாகப் பேசிய அவர், எந்தவொரு நபரும், அவர்களின் பாலின நோக்குநிலை அல்லது பாலின அடையாளத்தைப் பொருட்படுத்தாமல், எந்தவொரு விளையாட்டிலும் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்று கூறினார்.

மாற்றுப் பாலினத்தவர் இலங்கையர்களை விளையாட்டில் பார்க்க விரும்புகின்றனர் எனவும், ஒருவரின் பாலியல் நோக்குநிலை அல்லது பாலின அடையாளம் யாருடைய விளையாட்டிலும் விளையாடும் திறனைப் பாதிக்கக்கூடாது என்றும் அவர் கூறினார்.

# யாழ். பல்கலை கலைப்பீடம் நடத்தும் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு ஜூலை 29 மற்றும் 30 களில்!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடம் நடத்தும் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு ஜூலை 29 மற்றும் 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது.

இது தொடர்பாக, 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாட்டின் அமைப்புக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு –

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை அது ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டு கால வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் சர்வதேச ஆய்வு மாநாடு 2022 (Jaffna University International Research Conference 2022 (JUICE 2022) இன் ஒரு துணை மாநாடாகவும், 'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்ற கருப்பொருளிலே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம், 'மானுடம் ஆராய்ச்சி மாநாடு – 2022' இனை இம்மாதம் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நாடு ஒரு பெருந்தொற்றுநோயின் பிடியிலும், நாட்டினுடைய கல்வி உட்பட பல்வேறு துறைகள் பெருந்தொற்று ஏற்படுத்திய நெருக்கடிகளிலும் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு சூழலிலே, இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் மூன்றாம் நிலைக்கல்வி ஆரம்பிக்கப்பட்டதன் நூறு ஆண்டுகளின் (1921 – 2021) பூர்த்தி இடம்பெற்றிருக்கிறது.

புரட்சிகரமான திறவுகள் மற்றும் நெருக்கடிமிக்க சவால்களை உள்ளடக்கிய இந்த நூற்றாண்டுகால கால வரலாற்றை மீட்டுப் பார்த்து, அதனை விசாரணை செய்யும் செயன்முறைகளின் ஒரு பகுதியாகவும், மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை இந்த வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும் இந்த சர்வதேச ஆய்வு மாநாடு அமையும்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை (29ஆம் திகதி) மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகும் தொடக்க நிகழ்விற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மாநாட்டின் பிரதான ஒழுங்கமைப்பாளர் கலாநிதி ரி.சனாதனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஆய்வு மாநாட்டின் பிரதம ஆசிரியர் கலாநிதி எம். திருவரங்கன் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

மாநாட்டின் முக்கிய உரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் முதலாவது பீடாதிபதியான வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கே. இந்திரபாலா 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மனிதப் பண்பியற் கற்கைகள் முதற் பத்தாண்டுகள் (1974 – 1984)' என்னும் தலைப்பிலும், இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சுஜித் சிவசுந்தரம் 'இலங்கையில் மானுடர்களும் சூழல்களும்' என்னும் தலைப்பிலும் நிகழ்த்தவுள்ளனர். நன்றியுரையை மாநாட்டின் செயலாளர் அபிராமி ராஜ்குமார் நிகழ்த்துவார்.

தொடர்ந்து, மாநாட்டின் பிரதான நிகழ்வுகளான குழுநிலைக் கலந்துரையாடல்களும் ஆய்வுக் கட்டுரை அமர்வுகளும் அடுத்த நாள் சனிக்கிழமை (30ஆம் திகதி முழுநாள் அமர்வுகளாக இடம்பெறவுள்ளன. இந்த அமர்வுகளில் பின்வரும் கருப்பொருள்களில் ஆய்வுக் கட்டுரைகள் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், செயற்பாட்டாளர்களால் முன்வைக்கப்படவுள்ளன.

## யாழ்.பல்கலை இந்து கற்கைகள் பீட முதலாம் அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வுகள்

யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் முதலாவது அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு அறிமுக வைபவம் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 8 மணி முதல் இடம்பெறவுள்ளது.

க. பொ. த உயர்தர 2019 ஆம் ஆண்டு கலைப் பிரிவில் தோற்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் கலைப் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் சுமார் 50 மாணவர்கள் இந்து கற்கைகள் பீடத்தில் 2020 / 2021 ஆம் கல்வியாண்டுக்காகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வே எதிர்வரும் 27 ஆம் திகதி, புதன்கிழமை காலை அறிமுக வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை நிறுவிய காலத்தில் இருந்தே இந்து கற்கைகளுக்கென தனியான பீடமொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும் 2019 ஆம் ஆண்டே அதற்கான அங்கீகாரம் கிடைத்தது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதந்துரைக்கமைவாக அப்போதைய நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஒப்பமிட்டு 2019 ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதி வெளியிடப்பட்ட 2115/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் யாழ். பல்கலைக்கழகத்தின் 11 ஆவது பீடமாக இந்து கற்கைகள் பீடம் ஸ்தாபிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் இந்து கற்கைகள் பீடம் செயற்படத் தொடங்கியது. அதன் முதலாவது பீடாதிபதியாக கலாநிதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன் நியமிக்கப்பட்டிருந்தார். ஆரம்பத்தில் கலைப்பீடத்திடன் இணைக்கப்பட்டிருந்த இந்து நாகரிகம், சைவ சித்தாந்தம், சமஸ்கிருதம் ஆகிய துறைகள் இந்து கற்கைகள் பீடத்தினுள் உள்வாங்கப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்களில் ஒன்றாக இந்து கற்கைகளுக்கென தனியான பீடம் ஒன்று நிறுவப்பட்டு, மாணவர்கள் கற்றுத் தேற வேண்டுமென்பது வள்ளலார் சேர். பொன். இராமநாதனின் கனவுகளில் ஒன்றாக இருந்ததெனவும், தற்போது முதலாவது மாணவர் உள்வாங்கலின் மூலம் அவரது கனவு மெய்ப்படுகிறதெனவும் மூத்த கல்வியியலாளர்களும், அறிஞர்களும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

## யாழ்ப்பாண விமான நிலையத்தை பார்வையிட்ட வடமாகாண ஆளுநர்




யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்த விஜயம் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது யாழ்ப்பாண விமான நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

விமான நிலைய ஓடுதளத்தை அகலப்படுத்தும் நடவடிக்கை மற்றும் விமான நிலையத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாற்றுப்பாலின சமூகத்தினருக்காக யாழ். பல்கலைக்கழகத்தில் பேரணி!




மாற்றுப்பாலின சமூகத்தினருக்கு எதிரான ஒடுக்குமுறைகளை கண்டித்தும், விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பேரணியொன்று இடம்பெற்றது. இரண்டு மணியளவில் இந்த பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி, பல்கலைக்கழக பிரதான நுழைவாயில் ஊடாக சென்று விஞ்ஞான பீட நுழைவாயில் ஊடாக பல்கலைக்கழகத்திற்குள் சென்று நிறைவடைந்தது.

அத்துடன் மாற்றுப்பாலின சமூகத்தினர் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆற்றுகையொன்றும் இடம்பெற்றுள்ளது. யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப்பலரும் இந்த பேரணியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ராஜிதவுக்கு எதிரான மோசடி வழக்கு மீளப்பெறப்பட்டது

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிரான மோசடி வழக்கு மீளப்பெறப்பட்டுள்ளது.

ராஜித சேனாரத்ன கடந்த 2010 முதல் 2015 வரை, மஹிந்தவின் இரண்டாம் தவணை பதவிக்காலத்தில் மீன்பிடித்துறை, நீரியல் வளங்கள் அமைச்சராக பணியாற்றியிருந்தார்.

பதவிக்காலத்தில், அவரது செயலாளர் ஒருவரின் பெயரில் சீனாவிலிருந்து 8 கப்பல்களை தருவித்துள்ளார் எனவும், கறுப்பு பட்டியலிலுள்ள நிறுவனம் ஒன்றுக்கு கொழும்பு – முகத்துவாரம் மீன்பிடித்துறைமுகத்தை குத்தகைக்கு வழங்கினார் எனவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றப்புலனாய்வு பொலிஸார் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தனர்.

எனினும், மேற்படி வழக்கு தற்போதைக்கு இலஞ்ச, ஊழல் தடுப்பு சட்டப்பிரிவின் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டதால், இந்த வழக்கை மீளப்பெற குற்றப்புலனாய்வு பொலிஸார் நீதிமன்றத்தில் அனுமதி கோரியிருந்தனர்.

இதனை தொடர்ந்து, கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் கேமிந்த பெரேராவின் அனுமதியுடன் ராஜித சேனாரத்னவுக்கு எதிரான மோசடி வழக்கு மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!




- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம்-74**

### வேதனையும் ஏமாற்றமும் தரும் நிதர்சனங்கள்

காலிமுகத் திடலில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கொடுமைகள், அட்டூழியங்கள், தொடர்ந்து முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட அழிவுகள் பற்றி தார்மீ



முருக பூபதி

கங்கள் பேசப்பட்டன. அவை பல்வேறு விதங்களிலும் கோணங்களிலும் சிங்கள மக்களைச் சென்றடைந்து அவர்களை விழிக்கச் செய்தன. பலரின் உணர்ச்சிகளை அவை சுண்டி விட்டிருக்கின்றன. குற்ற உணர்வுகளால் கூட பல அனுதாபச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தப் புரிந்துணர்வுகள் மக்களிடையே இணக்கத்திற்கான பாலங்கள். அவற்றில் முக்கியமாகக் கூட்டமைப்பின் இளம் தலைவர்கள் – மூன்று மொழி களிலும் சரளமாகப் பேசும் ஆற்றல் உள்ள சுமந்திரனும் சாணக்கியனும் – அவர்களின் பல கூட்டங்களில் கலந்து கொண்டமை அவர்கள் போராட்டக் குழுக்களின் தலைவர்களுடன் நெருங்கி விட்டார்கள் என சிலாகிக்கப்பட்டது.

எனினும் பின்னர் இந்தப் போராட்டக் குழுக்களின் தலைவர்கள் மற்றைய பெரும்பான்மை கட்சிகளின் தலைவர்களோடும், சுமந்திரன், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் போன்றோருடனும் கலந்து கொண்ட கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொது ஆவணத்தை உற்று நோக்கினால் பெரும்பான்மை இனக் கட்சிகளிடமிருந்து இவர்கள் சற்றேனும் வேறுபட்டாலும், இடதுசாரிச் சிந்தனைகள், அவர்களது வரலாற்று பின்னணிகளால் இன்றும் தமிழ் தேசியத்தையோ, அது நாடி நின்ற தனித்துவத்தையோ, சர்வதேச மனித உரிமை சட்டங்களின் வளர்ச்சிகளால் தமிழ் மக்கள் போன்ற பாரம்பரிய தன்மை கொண்ட இனக் குழுமங்களுக்கு சட்டரீதியாக இருக்கின்ற சுய நிர்ணய உரிமையையோ கூட அவர்கள் கணக்கெடுக்கவில்லை என்பது புரிந்தது. அவர்களுக்கு ஆட்சி மாற்றம் முக்கியமாக இருந்தது. எல்லோரும் சமமாக நடத்தப்பட வேண்டும், இனங்களுக்கிடையே வேற்றுமைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் புதிய அரசமைப்பு வரவேண்டும் என்பவையே முன் நின்றன.

ஜெயகாந்தன் 'சினிமாவுக்குப் போன சித்தாளு' என்று எழுதிய நாவல் பின்னர் சினிமாவாகவும் வந்தது. சித்தாளு சினிமாவில் வந்தவற்றை நிஜ வாழ்க்கையாக நினைத்து சீரழிந்தாள்.

ஐம்பது சதம் கொடுத்து கலரியில் படம் பார்த்துக் கனவுலகில் சஞ்சரிக்கும் கூட்டங்கள் தங்களது வாழ்வுக்காக வெளியில் வரவேண்டும், அதற்காக அப்படிச் சுலபமாக அவர்களைச் சிக்க வைத்திருக்கும் கலரி வகுப்பை ஒழிக்க வேண்டும் என்ற தீர்மானங்களை மார்க்ஸிய நெறிகளில் விஜேவீர முன் வைத்தார்.

தமிழ் மக்கள் காலிமுகத் திடல் தார்மீகங்களை எட்டி நின்றே பார்த்தார்கள். அப்படியிருந்தும் அவை எழுப்பிய அனுதாபங்களால் பாரிய மாற்றங்கள் புதிய அரசின் மூலம் வரும் என்று நினைத்தார்கள். தங்களது கௌரவத்துக்கு மட்டுமல்ல, வாழ்வாதாரத்துக்கே அலையும்போது எதிர்பார்ப்புகள் அதிகமாகின்றன. ஆனால் நடந்த மாற்றங்களினால் – அரசியல் தந்திரங்கள், சாணக்கியங்கள், சூழ்ச்சிகள், கபடங்கள் போன்றவற்றின் நிதர்சனங்களால் – ஏற்பட்ட ஏமாற்றங்கள் தமிழ் மக்களுக்கு விரக்தியையே தந்திருக்கின்றன. யாரை நம்புவது என்ற கேள்விகளும் எழுகின்றன.

### இனப் பிரச்சினையில் தீவிர இடதுசாரிப் பரிமாணம்

இளைஞர்களின் 1971 கிளர்ச்சிக் காலத்தில் தீவிர இடதுசாரிகள் – முக்கியமாக ஜே.வி.பி. – இனப்பிரச்சினையில் ஒரு நிலைப்பாட்டை எடுக்கவில்லை என முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

மற்ற இடதுசாரிகள் யாவருமே இனப்பிரச்சினையை சோசலிச, மார்க்ஸிய வர்க்கப் போராட்ட சிந்தனைத் தளங்களில்தான் பார்த்தார்கள்.

ஆனாலும் அதுவரை தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட சமஷ்டிக் கட்டமைப்புக்கு சிங்கள மக்களிடையே பெரும்பான்மையான ஆதரவு இருக்கவில்லை. அது பிரிவினையாகவே பெரும்பான்மைக் கட்சிகளால் பிரச்சாரப்படுத்தப்பட்டது.

முதலாளித்துவ அடிப்படையில் அவர்களது தேவைகளையும் கட்டமைப்புகளையும் பாதுகாக்க வடிவமைக்கப்பட்ட இராணுவக் கட்டமைப்புகள் 1971 இல் எழுந்த சிங்கள இளைஞர்களின் எழுச்சியை இரும்பு கரங்கள் கொண்டு, தங்களின் இனத்தவர்கள், உறவுகள் என்றும் பாராமல் கொன்று, குவித்து, சதிராடி முடித்தன.

அப்பொழுதும், ஏன் இப்பொழுதும், இராணுவத்தினருக்கு 1971 கிளர்ச்சியிலிருந்து நாட்டை மீட்டார்கள், தேசத்தின் காவலர்கள், வீரர்கள் என்ற கௌரவங்கள் தென் இலங்கைப் பொதுமக்களால் தரப்படுவதில்லை. அவர்களை அந்த விடயத்தில் அப்படியே கொலை வெறியர்களாகவே தெற்கு மக்கள் பார்க்கிறார்கள். அந்தப் பார்வையின் பயன்களினால் அரசாங்கங்கள் கூட இராணுவத்தினரை கௌரவிப்பது இல்லை.

ஆனால் மாற்றாக, தமிழ் மக்களின் விடுதலைப் போரில் வென்றெடுத்த இராணுவத்தினர் அதற்காகப் பெற்ற மகுடங்களோ பல்வேறானவை. இன்றும் நாட்டின் ஒற்றுமையை வென்றெடுத்த வீரர்களாக, தீரர்களாக சிங்கள மக்களாள் அவர்கள் பார்க்கப்படுகிறார்கள். அரசியல்வாதிகளும் தங்களுடைய வசதிகளுக்காக அந்த மனோபாவங்களை வளர்க்கிறார்கள்.

எழுத்தாளர் முருக பூபதி தனது 'நடந்தாய் வாழி களனி கங்கை' என்ற நூலில் ஜே.வி.பி. தோற்றத்தையும் அவர்களின் வளர்ச்சிகள் பற்றியும் குறிப்பிடுகிறார். அதில் அவர் "களனி கங்கையில் ஆற்று நீர் மட்டும் பெருகி ஓடவில்லை, குருதியில் குளித்துத்தான் 1971 இல் களனி கங்கை ஓடினாள். தடை செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர், பொலிஸ் நிலையங்களின் பின்புற வளவுகளில் அவர்கள் எரிக்கப்பட்டனர் பலரது உடல்கள் களனி கங்கையிலும் வீசப்பட்டன, களனி கங்கையில் மூங்கில் படகுகள் மாத்திரமல்ல, இளைஞர்களின் சடலங்களும் 1971 காலப்பகுதியில் மிதந்து வந்த காட்சியைப் பலரும் மறந்திருக்க மாட்டார்கள்" எனப் பதிவிடுகிறார்.





லயனல் போபகே


சிங்கள இராணுவத்தின் மூர்க்கத்தனம் அவர்கள் விரோதத்துடன் ஏவப்படும் போது என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை தமிழ் விடுதலைப் போராளிகள் தீவிரமாகச் சிந்திக்க மறுத்து தாங்கள் வெற்றியீட்டுவோம் என்ற அளவுக்கு மீறிய நம்பிக்கையில் இருந்தனர் என லயனல் போபகே கூறினார்.

முதலில் இனப் பிரச்சினையில் நிலைப்பாடு ஒன்றை வைக்காமல், 1977 பின் பகுதிகளில் இரட்டை விளக்கங்கள் தரக்கூடிய ஒரு கொள்கையை அறிவித்து, 1983 வரையான காலங்களில் சுயாட்சியையோ, பிரதேச உரிமையையோ மறுத்து, 87 இல் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் பின் முற்றும் முழுதாக இனவிரோதத்தை இந்தியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற போர்வையில் முன்னெடுத்தார்கள் ஜே.வி.பியினர் என்ற அபிப்பிராயங்கள் உள்வீட்டுப் பிள்ளையும் முக்கிய தலைவருமான லயனல் போபகேக்கு உண்டு.

அதே சமயம் 1971ல் அவர்களுக்கு எதிரான குற்றவியல் வழக்குகளில் முழுமையாக பங்கெடுத்து விஜேவீராவுக்குக் கூட வாதாடியவர்கள் பாலாதம்பு, பின்னாள் 'தமிழ் டைம்ஸ்' ஆசிரியராக இருந்த ராஜநாயகம் போன்ற தமிழர்களும் எட்மண்ட் சமரக்கொடியும்தான் என்று நன்றி உணர்வும் ஆதங்கமும் லயனல் போபகேக்கு உண்டு. லயனல் போபகேக்கு தற்சமயம் ஆஸ்திரேலியா மெல்பனில் வசிக்கிறார். அவருடன் நெருங்கி குடும்பத்தவராக உறவாடும் வாய்ப்பு நண்பர் முருக பூபதி ஊடாகக் கிடைத்தது.

தற்சமயம் லயனல் போபகே ஈடுபடும் பொதுப்பணிகளிலும் ஸ்ரீலங்காவை பற்றிவெளிப்படுத்தும் ஆதங்கங்களிலும் பங்கு பெற்று வருவதால் அவரது ஆழமான உணர்வுகளையும், அனுபவங்களையும் புரிந்து கொள்ள முடிகிறது.

(தொடர்ந்து பார்ப்போம்)



காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கையின் கடனை மறுசீரமைப்பதில் சீனா காத்திரமாக ஒத்துழைக்க வேண்டும்

## அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஜேனட் யெலன் அம்மையார் வலியுறுத்து

இலங்கைக்கு 'மிக முக்கியமான' கடனளிக்கும் தரப்பு சீனா என்றும், இலங்கையின் கடனை மறுசீரமைப்பதில் சீனா காத்திரமாகப் பங்குபற்றினால் அது இரு நாடுகளின் நலனுக்காந்தாகவும் அமையும் என்றும் அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஜேனட் யெலன் அம்மையார் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

இலங்கை உட்பட கடன் நெருக்கடியில் உள்ள நாடுகளின் கடன்களை மறு சீரமைப்பதற்கான நீண்டகால முயற்சிகளில் அதிக ஒத்துழைப்புடன் இருக்குமாறு சீனாவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இருபது முக்கிய பொருளாதாரங்களின் குழுவின் மற்ற உறுப்பினர்களை தாங்கள் வலியுறுத்துவதாக யெலன் கூறினார்.

சிறிலங்கா சீனாவுக்கு குறைந்தபட்சம் 5 பில்லியன் கடன்பட்டுள்ளது, இருப்பினும் சில மதிப்பீடுகள் அதை விட இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது எனக் காட்டுகின்றன.

இந்தியாவும் அதற்கு 3.8 பில்லியன் டொலர்கள் கடனாகக் கொடுத்துள்ளது. மற்றும் ஜப்பான் குறைந்தபட்சம் 3.5 பில்லியன் டொலர்கள் கடனைக் கொடுத்துள்ளது, சர்வதேச நாணய நிதியத்தின்படி, மற்ற பணக்கார நாடுகளுக்கு மற்றொரு பில்லியன் டொலர் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்தோனேசியாவின் பாலித் தீவில் நடைபெற்ற ஜி20 நிதி அதிகாரிகளின் சந்திப்பின் போது நடைபெற்ற செய்தி மாநாட்டில், இலங்கையால் அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை, மேலும் கடனை மறுசீரமைக்க இலங்கையுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக இருக்கும் என்பது எனது நம்பிக்கை என்று யெலன் கூறினார்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மக்கள் எழுச்சியிலிருந்து தப்பித்து நாட்டை விட்டு வெளியேறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலுக்காக மக்கள் காத்திருந்த அந்தச் சமயத்தில் இலங்கையின் சமீபத்திய நிகழ்வுகள் குறித்து கருத்து தெரிவிக்க யெலன் மறுத்துவிட்டார்.

பல வருடங்களாக அரசாங்கத்தின் அதிக கடன்கள் மற்றும் வரிக் குறைப்புக்கள் மற்றும் கொவிட்-19 தொற்றுநோயின் சேதமான தாக்கத்திற்குப் பிறகு மே மாதத்தில் இலங்கை தனது 51 பில்லியன் டொலர் சர்வதேசக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை.

22 மில்லியன் மக்கள் வசிக்கும் நாட்டின் பொருளாதாரம் 2019 இல் ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் பெரிய வரிக் குறைப்புகளால் நாட்டின் கஜானாவை வெளியேற்றிய பின்னர் விரிசல் காட்டத் தொடங்கியது.

கொவிட் தொற்றுநோய்ப் பரவலின் பின்னர் இலாபகரமான சுற்றுலாத் துறை சிதைந்தது. மேலும் உலகளாவிய விலைகள் உயர்ந்து எரிபொருள், மருந்து மற்றும் உணவு போன்ற அத்தியாவசிய பொருள்களுக்காகக் கொழும்பை போராடிவருகிறது.

2020 அக்டோபரில் கி20 உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகபூர்வ கடனாளர்களின் பாரிஸ் கிளப் ஆகியவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான கட்டமைப்பின் கீழ் கடன் நிவாரணம் வழங்குவதற்கான முயற்சிகளில் ஒத்துழைக்கத் தவறியதற்காக சீனாவை யெலன் சாடினார்.

மூன்று நாடுகள் - சாம்பியா, எத்தியோப்பியா மற்றும் சாட் - மேற்படி கட்டமைப்பின் கீழ் உதவிக்கு விண்ணப்பித்துள்ளன. ஆனால் அந்த முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன - தற்போது உலகின் மிகப்பெரிய இறையாண்மைக் கடனாளி மற்றும் தனியார் துறை கடனாளிகளான சீனாவின் கால் வாரல் காரணமாக.

மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு உதவ இன்னும் நிறைய செய்ய வேண்டும், இந்த றூ20 கூட்டங்களில் நான் வலியுறுத்தும் ஒரு முக்கிய செய்தி இது என்று யெலன் செய்தியாளர்களிடம் கூறினார்.

மோசமடைந்து வரும் உலகளாவிய பொருளாதார நிலைமைகளை மேற்கோள் காட்டி, உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு, பல வளரும் நாடுகளைக் கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்குள் தள்ளியுள்ளது.

எனது இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கம், சீனா உட்பட ஜி20 கடனாளர்களை இப்போது கடன் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள வளரும் நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்புகளை இறுதி



செய்யத் தள்ளுவதாகும் என்று அவர் கூறினார்.

சீனத் தலைவர்கள் வளரும் பொருளாதாரங்களுக்கு, பல்வேறு சீனக் கடன் வழங்குநர்களிடையே சிறப்பாக ஒருங்கிணைக்க வேண்டும் என்று கூறிய யெலன், அந்த நாடுகளின் கடன் பிரச்சினைகளை இலகுபடுத்தித் தீர்ப்பதற்கு சீனா தன்பங்களிப்பை முடுக்கிவிடவில்லை என்பது மிகவும் ஏமாற்றமளிக்கிறது எனவும் இந்த வார தொடக்கத்தில் செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் வறுமைக் குறைப்பு மற்றும் வளர்ச்சி அறக்கட்டளைக்கு வொஷிங்டன் 70 மில்லியன் டொலர்களை மானியமாக வழங்கும். மேலும் சர்வதேச நாணய நிதியம் உலகின் ஏழ்மையான பொருளாதாரங்களுக்கு பூஜ்ஜிய வட்டிக் கடன்களைத் தொடர்ந்து வழங்கும் என்றும் யெலன் கூறினார்.

# இலங்கையில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு சீன முதலீட்டாளர்களுக்கான எச்சரிக்கை

இலங்கையில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு, வளர்ந்து வரும் சந்தைகளில் அரசியல் அபாயம் குறித்து சீன முதலீட்டாளர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சமீபத்திய எச்சரிக்கை என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த வளரும் நாடுகளில் சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டால், வெளிநாடுகளில் செயல்படும் சீன நிறுவனங்கள் நெருக்கடி மேலாண்மைத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என்று 'கன்ட்ரோல் ரிஸ்க்ஸ்' என்ற ஆலோசனையின் பங்குதாரரான கிறிஸ் டோரன்ஸ் கூறுகிறார்

"பயனுள்ள நெருக்கடி மேலாண்மைத் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டிய தன் அவசியத்தை இலங்கைநிலைமை நினைவூட்டுகிறது. என்ன செய்ய வேண்டும் என்பதை அனைவரும் அறிந்திருப்பதை உறுதிப்படுத்த வழக்கமான பயிற்சிகள் அல்லது இந்த செயல்முறையின் ஒரு பகுதியாக காட்சி திட்டமிடலும் அவசியம்" என்று டோரன்ஸ் கூறினார்.

இலங்கையில் கடுமையான உணவு மற்றும் எரிபொருளின் பற்றாக்குறையால் தூண்டப்பட்ட பாரிய எதிர்ப்புக்கள் கடந்த வாரத்தில் உச்சத்தை எட்டியது, கோபமான ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டை முற்றுகையிட்டு ஆக்கிரமித்தபோது, இந்த வாரம் ராஜினாமா செய்வதற்கு முன் மாலைதீவுக்கு தப்பிச் சென்றார்.

கடந்த மாதம் கராச்சியில் அதிக பணவீக்கம் மற்றும் நீடித்த மின்வெட்டு மக்களைத் தூண்டியமையால் மக்கள் கிளர்ச்சி ஆபத்து ஏற்பட்டுள்ளது. அதிக கடன்பட்டுள்ள மற்ற வளரும் நாடுகளில் இலங்கை பாணியில் குழப்பம் ஏற்படும் என்ற கவலைகள் அதிகரித்து வருகின்றன. பாகிஸ்தானில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில் குறைந்தது ஒரு பெண் இறந்தார்.

ஷாங்காயில் உள்ள ஃபுடான் பல்கலைக் கழகத்தின் தெற்காசிய ஆய்வுப் பேராசிரியர் லின் மின்வாங் கூறுகையில் -

"வெளிநாடுகளில் முதலீடு செய்யும் போது, குறிப்பாக சர்வதேச சூழல் சரியாக இல்லாதபோது, முதலீட்டாளர்கள் உள்நாட்டு நிர்வாகத்தின் திறனைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தெற்காசியாவில் உள்ள நாடுகள் பொதுவாக அதிக கடன் விகிதங்களைக் கொண்டிருக்கின்றன, எனவே சீன முதலீட்டாளர்களுக்கு இலங்கை நெருக்கடி ஒரு நினைவூட்டலாக இருக்கலாம்.

இலங்கையில் ஏற்பட்ட குழப்பம், சீனா இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பான விவாதங்களையும் மீண்டும் கிளப்பியுள்ளது. எதிர்மறையான ஊடகக் கவரேஜ் காரணமாக சீன முதலீட்டிற்கு உள்ளூர் மனக்கசப்பு இருக்கலாம் என்று டோரன்ஸ் கூறினார்.





சீன வர்த்தக அமைச்சின் கூற்றுப்படி, இலங்கையில் சுமார் 100 சீன நிறுவனங்கள் இயங்கி வருகின்றன, ஒப்பந்த திட்டங்கள், முதலீடு மற்றும் வர்த்தகம் என அனைத்திலும் ஈடுபட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 3,400 க்கும் மேற்பட்ட சீன பிரஜைகள் இலங்கையில் பணிபுரிந்தனர்.

வியாழன் அன்று காணொலி இணைப்பு வழியாக ஒரு சந்திப்பின் போது, சீன தூதர் கொழும்பின் Qi Zhenhong, சீன நிறுவனங்களுக்கு தற்போதைய சூழ்நிலை மிகவும் சிக்கலானதாகவும், நிலையற்றதாகவும் மாறியுள்ளதால் முழுமையாக தயாராக இருக்க வேண்டும் என்று சீன வர்த்தக சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை.

சீன நிறுவனங்கள் தங்கள் அவசரத் திட்டங்களை மேம்படுத்தவும், நிலைமை முக்கியமானதாக இருக்கும்போது அவற்றைப் பயன்படுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்தவும் தேவையான பயிற்சி களை மேற்கொள்ளவும் குய் வலியுறுத்தினார்.

தூதரகத்தின் ஆலோசகரான Li Guangjun, இலங்கையில் தேவையற்ற ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கவும், தரையில் உள்ள பாதுகாப்புப் படைகளுடன் மற்றும் சுற்றியுள்ள சமூகத்துடன் நேர்மறையான தொடர்புகளைப் பேணிக் கொண்டிருக்கும் போது, பொருள்களைக் குவிக்கவும் சீன நிறுவனங்களிடம் கூறினார்.

டோரன்ஸ் தனது நிறுவனத்தை வெளியேற்றுவது குறித்து சில சீன வாடிக்கையாளர்களால் அணுகப்பட்டதாகக் கூறினார். சிலர் அரசியல் ஆபத்து சூழலை அறிந்திருக்கவில்லை மற்றும் நாட்டில் பொருளாதார பிரச்சனைகள் உயர்ந்த பாதுகாப்பு அபாயங்கள் என்று கருதுகின்றனர், டோரன்ஸ் கூறினார்.

லின் கூறினார்: உள்நாட்டு சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் இந்த திட்டங்களின் முழு செயல்பாட்டையும் பாதிக்கலாம். இந்த மாதிரியான பாதிப்பு தவிர்க்க முடியாதவை, ஆனால் பெரிதாக இருக்காது என்று நினைக்கிறேன்."

உள்ளூர் சூழ்நிலைகளை ஆழமான புரிதல் மற்றும் நெருக்கமான கண்காணிப்பு வைத்திருப்பது முக்கியம் என்று டோரன்ஸ் கூறினார்.

சில நாடுகளில் சீன நிறுவனங்கள் அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் வகையில் செயல்படும் முறையை மாற்றி வருகின்றன.

உதாரணமாக, பாகிஸ்தானில், தீவிரவாத குழுக்கள் சீன திட்டங்களை குறிவைத்துள்ளமையால், நிறுவனங்கள் தாங்கள் அனுப்பும் சீன பணியாளர்களின் எண்ணிக்கையை குறைத்து, உள்ளூர் ஊழியர்களுடன் அவர்களை மாற்றுவது குறித்து பரிசீலித்து வருகின்றன.

அங்கோலா போன்ற நாடுகளில் கூட, சீன வணிகங்கள் நீண்டகாலமாக நிலை நிறுத்தப்பட்ட நிலையில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தின் அச்சுறுத்தல், கடத்தல் அல்லது மிரட்டி பணம் பறிக்கும் அபாயத்தைக் குறைக்க சீன சமூகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

**(நன்றி: 'சவுத் சைனா போஸ்ட்')**